பாரடா நீபோய் பாவை தன்னை
என்றால், அதையும் ஏற்க வில்லை.
அந்தப் பொண்ணை அயலொரு வனுக்குத்
தரும்படி சொன்னார் தந்தை என்றால்,
அப்பா மனப்படி ஆகுக என்றான்
இப்படிப் பட்டவன் என்ன செய்வான்?
அப்பா அயலவள் அகத்தில் நுழைந்தார்
இப்பக் கத்தில் இனிவரரார். ஆதலால்
திருமணத்தை நீ செய்துகொள் என்றால்,
ஓலை விடுக்கவும், ஊரைக் கூட்டவும்,
சாலும் கரகம் தனியே வாங்கவும்,
பாதபூசை பண்ணிக் கொள்ளவும்
அப்பா வேண்டும்என் றொப்பனை வைக்கிறான்!

அமுதனார்: மடமையில் மூழ்கி மடிகின்றான் அவன்.
தன்மானத்தைச் சாகடிக் கின்றான்
மரக்கட்டைபோல் வாழ்ந்து வந்தான்.
இந்த நிலைக்கெலாம் ஈன்றவர் காரணர்
ஆயினும் தமிழ்ப்பற் றவனிடம் இருந்தது.
திராவிடர் கழகம் சேர்ந்து விட்டான்.
இனிமேல் அவனோர் தனியொரு மறவன்!
அரசினர் சிறையில் அடைத்தார் அவனை

இரிசன்: என்ன? என்ன? எப்போது விடுவார்?

மண்ணா: இருந்தும் பயனிலான் இருக்கட்டும் சிறையில்

அமுதனார்: எப்போது வருவான் என்ப தறியோம்
துப்பிலா அரசினர் சொல்வதே தீர்ப்பு!
நான் வருகின்றேன். நல்ல முத்துவின்
திருமணம் விரைவில் சிறப் படைக.

காட்சி 10

## திருமணம் என் விருப்பம்!

இரிசன் வீட்டில், வெள்ளையப்பன் வந்து
பேசுகிறான்.

வெள்ளை: அம்மாக்கண் தன் சொத்தெலாம் அளிப்பாள்.
உம்மகள் தன்னை, அம்மாக் கண்ணின்
மகனுக்கே, திரு மணம் செய்விப்பீர்.
என்மகன் பெரியதோர் இளிச்ச வாயன்!

இரிசன்: அம்மாக் கண்ணின் அடியை நந்தி
வீணில் வாழும் வெள்ளை யப்பரே.
உமது சொல்லில் உயர்வே யில்லை.
எமது கொள்கை இப்படி யில்லை.

